உ

கடவுள் துணை.

# ருமக்கள் துயரம்.

இஃது

தஞ்சை ஜனானுகூலன் பத்திராதிபர்

## வி. கிருஷ்ணதாசரவர்கள்

இயற்றப்பட்டதை

கீழ்க்கட்டளை

. துரைசாமி முதலியார் அவர்களால்

தமது

சென்னை சூளை, "ஸ்ரீ பாரதி" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1920

விலை] [அணா 2.

56400

SRI "BHARATHI" PRESS CHOOLAI, MADRAS.

# முகவுரை.

கனவான்களே!

இத்தேசத்தில் சிறுபெண்களை மாமி நாத்திமார் முதலானோர் கொடுமைசெய்து வரும் கெட்ட வழக்கம் நாகரீகமுதிர்ந்துவரும் இக்காலத்திலும் நீங்கவில்லை. ஏழைகள் வீடானாலும் செல்வர்கள் வீடானாலும் புதிதாய் வருகிற மருமக்கள்பாடு திண்டாட்டமாகவே யிருக்கின்றது. மருமகளென்று ஒருத்திவந்துவிட்டால் அவள் அவ்வீட்டுப் புழக்கைவேலை செய்பவளினும் கேடாகவே மதிக்கப்படுகிறாள். மருமகள் சிறுவயதுள்ளவர்களாதலால் அவர்களுக்கு நற்பழக்கமும் நல்லொழுக்கமும் குடித்தனம்செய்யும் முறை பழகுதலும் உண்டாவதற்காக அவர்கள் மாமியார் விசாரணையின்கீழ் நடத்தப்படுதல் அவசியமானாலும் இக்காலத்திலுள்ள மாமியார் அவைகளைக் கவனியாமல் மருமகள் என்றவுடனே அவர்கள் மீது பகைமையையே பாராட்டுதலும், அவர்கள் முகத்தில் முதல் முதல் விழிக்கும் போதே சத்துருவின் முகத்தில் விழிப்பதுபோல் கோரங் கொள்ளுதலும், அவர்களை மன க்ஷாத்திரத்தோடு கொடுமையாய் இரக்கமின்றி நடத்தியும் வருகின்றார்கள். அப்படி நடத்துபவர்களை அரசாங்கத்தார் அப்போதைக் கப்போது சிக்ஷித்துவந்தும் இன்னம் அவர்கள் கொட்டம் அடங்கினபாடில்லை. இக்கொடுமைகள் யாவும் இச்சிறுபுத்தகத்தில் தெளிவாய் விவரித்திருப்பதால் இதை வாசிக்கும் நம் சகோதர சகோதரிகள் அவைகளை முற்றும் நிவர்த்திப் பார்களென்பது எமது அபிப்பிராயம்.

S. D. M.

# மருமக்கள் துயரம்.

## கமலாம்பாள் துயரம்.

என் பிரியமுள்ள சகோதரியே!

தாலிகட்டி வீட்டிற்கு வந்ததுமுதல் நான் படும் கஷ்டம் கடவுள் ஒருவர்தான் அறிவார். எந்தவிதம் பாடுபட்டாலும் ஒரு சொட்டு சொல்லாமல் விடுவதில்லை மாமியார் போதாக்குறைக்குப பொன்னியம்மன் குறைவுபோல் எனக்கு ஒரு நாத்தி உண்டு அந்தப் புண்ணியவதி படுத்தும் இம்சையோ கணக்கில்லை. நல்ல சேலை உடுத்தினாலும் தலைவாரி முடித்தாலும் சாதாரண நகைகளைப்போட்டு அனுபவித்தாலும் பொறுப்பதில்லை. இதோடு விட்டதா? புருஷனுடன் ஆறியமரப் பேசவும் நேரமில்லை, என்ன செய்வது? காலையிலெழுந்தால் வீட்டு வேலை செய்யவும், சமையல் செய்யவும், புருஷருக்கு அன்னமிடவும், அவருக்கு வேண்டிய பணிவிடைகள் செய்யவும், குழந்தைகளைக் காக்கவும் சரியாயிருக்கிறது. இவ்வளவும் செய்துப்போட்டு மாமியாரையும் நாத்தியம்மாளையும் வேண்டி வேண்டி அழைத்து அன்னமிடுகிறவேளையில் என்பாடு மூன்றுங் கட்டுக்கு வந்துவிடும். சாப்பிட்டு அவர்கள் போனதும் நான் சாப்பிட்டு மற்றவேலைகள் பார்த்து வருவதற்குள் நல்லமணி இரண்டாகிறது. அதற்குமேல் கொஞ்சநேரம் ஏதாவது புஸ்தகம் வாசிக்கலாமென்றாலோ மாமியார் ஒரு பக்கம் புருஷனுக்குச் சம்பாதித்துப் போடுவதற்கு வாசிக்கிறாயோ? கள்ளப்புருஷனுக்கு இரகசியக்கடிதம் எழுதி

வரவழைக்கப் போகிருயோ? படித்துப் பாஸசெய்த முண்டங்கள் வீட்டில் தூங்குகின்றது, அடுப்பூதிக்குப்படிப் பில்லாவிட்டால் முழுகிப்போகுமோ? படிப்பா செருப்பா என்று தாறுமாருகத் திட்டுகிறதும் தவிர நாத்தனரும் குசுகுசென்று மந்திரம் ஓதுவாள். அதைக்கேட்டு மாமியார் பேசும்பேச்சு நக்ஷத்திரம் இற்றுவிழும்போலிருக்கும். இங்கேதான் இப்படி யிருக்கிறதே நம்மோடு படித்த எதிர் வீட்டு சுந்தரமிடம் போய்ப் பேசியிருப்போமென்ருலோ அவிழ்த்துவிட்ட கழுதைபோல் ஊர்ஊராய்ச் சுற்றப்போகிருயோ என்கிருர்கள். வீட்டிலேயே சும்மாயிருக்கவும் மனம் இடங்கொடுக்கவில்லை, அப்படியாவது இருந்து தொலேப்போமென்ருலோ "குட்டிச்சுவர்போல் உட்கார்ந்துகொண்டிருக்கிருயே ஏதாவது வேலை செய்யப்படாதா" என்கிருர்கள். என்னதான் செய்வது, அடுப்புமூட்டி இராச் சமயல் செய்துவிடலாமென்று போனலோ இராத்திரி பத்துமணிக்குச் சாப்பிடப்போவதற்கு இதற்குள் சமையல் என்ன? என்கிருர்கள் அம்மா! இதோடு ஒழிந்ததா? சமயல் எல்லாம் செய்துவிட்டபிறகு உடம்பு கசகச என்று தோன்றினல் குளித்து மயிர்சீவிப் பொட்டிட்டு நல்லவஸ்திரம் உடுத்தினலோ தாசிபோல் சிங்காரித்து * ஓடக்கால் தெருவுக்குப்போய் நிறகப்போகிருயோ? கள்ளமாப்பிள்ளையைத் தேடப்போகிருயோ? என்றுசொல்லிப் பேசுகிருர்கள். குளிக்காதிருக்கலாமென்ருலோ உடம்பு சகிக்க

---

* சென்னையில் (ஓடக்கால் தெரு) என்பது ஒன்றுண்டு (ஒய்டியூ கால்) என்றிருந்து ஓடக்காலெனக் காலக்கிரமத்தில் மருவியது, இங்கு விலைமாதர் அதிகம். சிலகாலத்துக்குமுன் அத்தெருவிற் செல்லும் ஆடவர் மீண்டும் திரும்புவது கஷ்டமெனப் பிரசித்தமான பேச்சு.

வில்லை, சகிக்கலாமென்றாலோ இராத்திரி எஜமானன்வந்து பார்த்து, அடிபெண்ணே! குளிக்கக்கூட நேரமில்லையோ? பறைச்சியாவது கொஞ்சம் சுத்தமாயிருப்பாளே? அதற்கும் நீ கேடுகெட்டவளா? வீட்டிலென்ன தண்ணீர் இல்லையா? உனக்குவந்த கேடுகாலம் என்ன? ச்சீ உன்னோடு வாழ்வதைவிட கழுதையைக் கட்டியழலாம் என்று அவர் வாயில் வராத சொல்லெல்லாம் சொல்லுகிறார், நான் எந்த வழியில்போவது. ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச்சொன்னால் நொண்டிக்குக் கோபம். இருதலைக் கொள்ளி எறும்புபோல் நான் கிடந்து தவிக்கிறேன் காலை நடக்கும் சங்கதி புருஷனிடம் சொன்னால் அப்போதே வந்தது அனர்த்தம். என்னசெய்து தொலைப்பது. இதை யோசிக்க யோசிக்க என்மனம் பதைக்கின்றது. எத்தனை நாளைக்குத் தான் இவ்வித கஷ்டப்படுவது சொல்லுமம்மா.

கமலாம்பாள்.

---

# காந்திமதி துயரம்.

என் அன்புக்குறிய கமலாம்பாள் !

நீ உன் புருஷன் வீட்டில் படுங் கஷ்டங்களையெல்லாங் கேட்டு என் மனம் நொந்துவாடி, என்னிரு கண்ணீரும் ஆருய்ப் பெருகுகிறது, என்செய்வது நம் நாட்டில் வீட்டுக்கு வீடு இப்படியேதா னிருக்கின்றது. என் விஷயத்தை நீ கேட்பாயாகில் உனக்கு மேலாகவேதா னிருக்கும், நீயாவது ஒரு மாமியார் ஒரு நாத்தியோடு போராடுகிருய், நானோ மாமியார் மூன்று நாத்தி இரண்டு ஓரகத்தி நான்கு இத்தனைபேர் மத்தியில் நான்தான் ஒருத்தி இளைத்தவள். ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோவிலாண்டி என்றபடி அத்தனைபேர் மத்தியில் நான் ஒருத்தி என்னபாடு பட்டுக்கொண்டு வருகிறேன்! நானும் ஒரு பெண்பிள்ளை எனக்கும் ஒரு தலைவாழையிலை என்று உன்னிடம் புத்திசொல்ல முன்வந்தேன், நான் இதைச் சொல்லுகையில் என் மனம் எங்கேயோ போய் அலைகிறது, நம்முடைய மாமிகளோ படிப்பில் பூச்சியம், மருமக்கள்மார்களை வைத்துக் காப்பாற்ற தெரியாது. பெண்ணைக் கொள்ளுகிற வரைக்கும் என் பெண்போல் பார்ப்பேன், என் கண்போல் பார்ப்பேனென்று நலமாகப் பேசுவார்கள். தாலிகட்டி முடிந்ததோ வீட்டு அடிமைபோல் பார்ப்பார்கள், நாமும் மூடர்களாயிருப்போமானல் அவர்கள் சொல்லும் சொல்லுக்கு எதிர் ஜவாப்பு சொல்லலாம். நமக்கு அவ்வாறு எதிர் நின்று சொல்ல மனமிடங் கொடுக்கவில்லை. என்னசெய்வது! என்னுடைய தந்தை எனக்குப் படிப்பு சொல்லிக்கொடுக்கப் பள்ளிக்கு அனுப்பும்போது என் பாட்டியார், ஐயோ

பெண்ணைக் கெடுக்கப் பார்க்கிறானே, இந்தப் படுபாவி! என்று தந்தையைத் திட்டுவாள். தந்தையோ அவர்கள் பேச்சைக் கேட்காது எனக்கு இவ்வளவு அறிவை விசாலித்துக் கொடுத்தார், அவருக்கு இது விஷயம் வந்தனம் தரவேண்டியது. கல்விதான் ஒருவருக்கு அழகே தவிர மற்ற அழகெல்லாம் அழகல்ல. தங்காய்! நம்முடைய மாமிகள் நாத்திகள் இவ்வாறு நமக்குக் கொடுமைகள் புரியவும் நாம் வருத்தமடைந்திருக்கவும் இதனைக்கண்ட நம்புருஷர்கள் நம்மிடம் இஷ்டங்கொள்ளாது பிறர்மனையை இச்சித்துச் செல்லவும் ஆகிறது என்னசெய்வது! நம்முடைய கருமந்தான் என்று எண்ணிக்கொள்ளவேண்டியது என்றாலும் நமக்கு இப்போது கிடைத்திருக்கும் அரசாங்கத்தார் வெகு நல்லவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். பிறர் துக்கம் சகியாதவர்களாம். ஆதலால் ஆங்காங்குள்ள கற்றுத் தேர்ந்த பெண்களெல்லாம் தாங்கள் தங்களுக்குள்ள நியாயமான குறைகளையெல்லாம் அப்போதைக்கப்போது அரசாங்கத்தாரின் கவனத்துக்குக் கொண்டு வருவோமாகில் காருண்ய நமது கவர்ன்மெண்டார் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது நாம் சுகப்பட ஏதுசெய்வார்களென் றெண்ணுகிறேன்.

காந்திமதி.

---

# பத்மாவதியின் துயரம்.

என் பிரியமுள்ள சகோதரியே !

என்னுடைய குறையைச் சொல்லுகிறேன் கொஞ்சம் கவனமாய்க்கேள். விடியுமுன்னெழுந்து வீடுமுழுதும்பெருக்கிமெழுகிப் பாத்திரந் துலக்கி மாட்டுச்சாணி வாரி அவைகளை எருமுட்டைத்தட்டி யாகவேண்டிய வேலையெல்லாம் நான் ஒருத்திபே செய்யவேண்டும், பால் கறக்கவேண்டும், தயிர் கடையவேண்டும், நெற்குத்தவேண்டும், தண்ணீர் வேண்டிய அளவு கொண்டுவந்து சேர்க்கவேண்டும், இத்தனை பெரிய குடும்பத்தில் நான் ஒருத்தியே சமையல்செய்யவேண்டும், இதோடு நில்லாது மாமன் மாமி புருஷன் கொழுந்தன்மார் முதலானவர்களுக்கும் தண்ணீர் கொண்டுவந்து குளிக்க வெந்நீர் வைக்கவேண்டும், மாமிமார் நாத்திமார் புடவைகள், புருஷன் மாமன் முதலானவர்கள் வேஷ்டிகள் இவைகளை ஒருமுட்டை சுமந்துபோய்த் தோய்த்து வரவேண்டும். இப்படியெல்லாஞ் செய்து அலுத்து வருவதோடு நில்லாமல் அது சொத்தை, இது சொள்ளை என்று தொடங்கி மடிபிடித்துவரும் மாமி நாத்திமாரோடு சண்டைக்கு நிற்கவும், என்னசெய்தாலும் மாமியார் ஒன்றும் செய்யவில்லையென்று சண்டைக்கு நிற்பாள். போதாக்குறைக்குப் புருஷனிடமும் சொல்லிப் பூசைவாங்கித் தருவாள், மாமன்மாரும் கொழுந்தன்மாரும் வெட்கங்கெட்டு வாயில்வந்தபடி என்னைத் தூஷணைவார்த்தைகளாற் பேசிச் சண்டைக்கு நிற்பதுமுண்டு. இப்படியெல்லாம் பாடுபட்டவளுக்கு வயிறார உண்ணவும், நன்றாயுடுக்கவும் கிடைக்கிறதா ? நான் சாப்பிடவந்தால் மாமியார் சாதம்போடவந்

டுவாள். அரைவயிற்றுக்குமேற் போட அவளுக்கு மனம் வரமாட்டாது, நல்லபுடவை யுடுக்கவிடமாட்டாள், நன்ருய்த் தலையிலெண்ணெய் தடவவும், தலைசீவி முடிக்கவும், பூச்சூடவும், நகைபோடவும் விடமாட்டாள். மறைவாயாவது எண்ணெய்தடவி தலைசீவக்கண்டால் உடனே ஏண்டி! நீ என்ன தேவடியாளா? மினுக்குப் பண்ணுகிருயே என்று வைதுக்கொண்டு நான் குடல் நடுங்கும்படி காலனைப் போல் கடுகடுத்து ஓடிவருவாள். இது மாத்திரமா? நான் என் புருஷனேடு சந்தோஷமாய்ப் பேசக்கண்டால் அவளுக்கு மனம் சகியாது என்புருஷன் என்மேல் சற்றே பக்ஷமாய் இருக்கக்கண்டால் தேவடியாள்முண்டை என்னமோ மாப்பிள்ளைக்கு மருந்தைப்போட்டு மயக்கிவிட்டாளென்று சண்டைக்குத் தொடங்குவாள். இன்னும் இல்லாத பொல்லாத கோள்களெல்லாஞ் சொல்லி அபசாரமேற்றி புருஷனையும் பகையாக்கிவிடுவாள். இப்படியாக என் மாமி வீட்டில் நான் படாதபாடுகள் பட்டு வருகின்றேனடியம்மா.

பத்மாவதி.

---

# மயிலாப்பூர் மரகதவல்லியின் துயரம்.

அடி அக்காள்!

என்னுடைய குறையை உன்னிடம் சொல்லாமல்பின் யாருடன் சொல்லப்போகிறேன் நகரத்திற் பிறந்த என்னை நாட்டுப்புறத்தில் கட்டிக்கொடுத்தபின் நான்படுங் கஷ்டம் சொல்லிமுடியாது. நான் காலையில் 4-மணிக்குள் எழுந்திருக்கவேண்டும். அந்த இருட்டிலேயே மாட்டு கொட்டகைக்குப்போய் சாணம் கொண்டுவந்து தெருமுதல் வீடுவரையில் சுத்திசெய்வதற்குள் பொழுதுவிடியும். பிறகு வீட்டுப் பாத்திரங்களை சுத்தப்படுத்தவேண்டும். வீட்டு விவகாரம் முடிவதற்குள் மணி 9-ஆகிவிடும். அதற்குமேல் கழனிக்குப் போயிருக்கிற கணவனுக்குக் கஞ்சிகொண்டு போகவேண்டும். அதோடு விட்டதா என் தலைவிதி, அங்கு கணவனுடன் களை பறிக்கவேண்டும், நாற்று நடவேண்டும். அதற்குள் மணி 12-ஆகிவிடும். அதன்பின் வீட்டையடைந்து கஞ்சி குடித்துவிட்டு, கேழ்வரகு அரைக்கவேண்டும். உடனே சாப்பாட்டுக்கு வேண்டிய நெல்லைக் குத்திக்கொள்ளவேண்டும். அந்த நெல்லைக்குத்தித் தாற்றிப்புடைத்து முடிவு செய்வதற்குள் என் ஜீவன் எமலோகஞ் செல்லும். அந்நேரவேளைக்கு மணி 5-ஆகிவிடும். அதற்குமேல் சமையல்வேலையைத் துவக்கிக்கொள்வதுடன் காட்டுக்குப் போயிருக்கும் புருடர்மாருக்கு அவாளவாளுக்குத் தக்கபடி வெந்நீர் சித்தப்படுத்தவேண்டும். இங்குபோல் நாட்டிலென்ன குழாவுண்டா? கிணற்றுத் தண்ணீரைத் தான் சேந்திக்கொள்ளவேண்டும். இந்தத் தண்ணீர் சேந்தும்போது கையிரண்டும் இற்றுப்போகும். என் கஷ்டத்தைக்

கடவுள்தான் அறியவேண்டும். இதற்குள் பண்ணைக்காரன், வண்ணான் இவர்கள் வந்துவிடுவார்கள். அவரவர்களுக்குத் தகுந்தபடி சர்பரா செய்யவேண்டும். வீட்டு விவகாரமெல்லாம் முடிய இரவு 8-மணியாகும். அதற்குமேல் நான் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் அந்நேரவேளையிலேயே சமைத்த பாண்டங்களையெல்லாம் ஒரண்டையிலிருந்து சுத்திசெய்ய வேண்டும். இப்படிக் காலையிலெழுந்து இரவு 10-மணிவரையில் மாட்டைப்போலுழைத்தும் நல்லபேர் கிடையாது.

அக்கா! இவ்வளவுதானா என்கதி? இன்னும் என் கதையைச் சொல்லப்போனால் பொழுதுவிடியும் பொற்கோழி கூவுமே, பிறர்கேட்டால் நகைப்பார்களே! அக்கா! வேலையின் கஷ்டம் ஒருபுறமிருந்தாலும் மாமியாருடனும், நாத்திமாருடனும் நான்படும் துன்பம் சொல்லமுடியாது, அதையும் கொஞ்சம் சூக்ஷமமாகவே சொல்லி முடித்து விடுகிறேன். கேளு எனக்கிருக்கும் மாமியோ நல்ல துணி கட்டப் பார்க்காள், ஒருவேலை செய்யும்போதே இன்னொருவேலை செய்யவில்லையென்று அடி தடிச்சிறுக்கியென்றும் தட்டுவாணியென்றும் வாயில் வருகிறபடியெல்லாம் திட்டுவதும் தவிர நாத்தி ஓர்பக்கம் ஆத்தாளிடம் ஏதாகிலும் கோள் குத்திவிட்டால் திடீர் திடீரென்று ஓடிவந்து மயிரைப்பிடித்து இழுத்துப்போட்டுக் கையிலகப்பட்டதை யெடுத்துக் கண்டபடி புடைத்து விடுவதுமல்லாமல் ஆ! தேவடியாள்! உன் மாப்பிள்ளை வரட்டும், உன் மதத்தை அடக்கிவிடுகிறேனென்று சபதம் செய்துவிட்டுப் பிள்ளை வந்ததும் அடே பையா? நீ அந்த மொட்டைச்சிறுக்கிக்கு முகங் கொடுத்திருப்பதினாலல்லவா அவள் திமிர்கொண்டு குடித்தனத்தைப் பாழ்செய்கிறாள். "ஏறு உழுகிறவன் இளப்பமானால் எருது மச்சினங் கொள்ளும்" என்பது

போல் உன் பெண்டாட்டிக்குக் கொடுத்த பலத்தாலல்லவா அச்சிறுக்கி என்னை மதியாமற் பேசினுள் என்று பல விதமாய்ப் புலம்புவாள். அதைக்கேட்டு அந்தப்பாவி நியாயம் அநியாயம் ஒன்றையும் கேட்காமல் தாத்துகோலைக் கொண்டு துரத்தியடிப்பார். கடைசியில் தாத்துக்கோல் அடி தாங்கமுடியாமல் ஆத்தாள் வீடு வந்து சேர்ந்தேன். நான் பூமியில் பெண்ணாய்ப் பிறந்துகொண்டது போதும் போதும் அக்கக்கா.

மைலாப்பூர் மரகதவல்லி.

---

# சென்னை மீனாள் துயரம்.

என் பிரியமுள்ள தோழியே!

நான் பட்டணத்திற் பிறந்து பட்டிக்காட்டில் வாழ்க்கைப்பட்டபின் நான் படுந்துயரம் ஆண்டவன்தான் அறியவேண்டும். காலையிலெழுந்தால் வீட்டுவேலையைத் தக்கபடி முடித்துவிட்டு அதற்குமேல் சமையல் வேலையை முடிப்பதற்குள் மத்தியில் சற்று அசந்து நின்றால் மாமியார் என்னடி தடிச்சிறுக்கி ஓதியமரம்போல் நிற்கின்றாய் என்பாள், இது என்ன இழவு என்று அடுப்பண்டையே குந்திச் சமையல் காரியத்தைப் பார்த்திருந்தாலும், அடி மூதேவி முண்டம்! என்னடி! எந்நேரமும் அடுப்புக்கு இடுப்பு பிடிக்கிறாயோ என்பாள். இது என்ன வம்பென மதித்து வேறுவேலையில் பிரவேசித்தாலும் ஓரகத்தியோ, என்னடி பெண்ணே! செய்கிற வேலையை விட்டுவிட்டு சிறைக்கிற வேலைக்குப் போய்விட்டாயோ என்று அவள் துக்கமா ஒருபக்கம், சரி வேலைதான் முடிந்ததே சும்மாவிருப்பதைப் பார்க்கிலும் கல்வியிலாவது கவனத்தைச் செலுத்துவோமென்று புஸ்தகத்தை எடுத்தாலோ அதைக்கண்ட மாமி ஆமாண்டி நீ படித்துதான் பாஸ்பண்ணி ஆபீசுக்குப் போய் ரூபீஸ் கொண்டுவரப் போகிறாயோ? ச்சீ எறிந்துவிட்டு வேலையைப்பாரடி என்பாள். புத்தகத்தை எறிந்துவிட்டு உடம்பாகிலும் குளிப்போமென்று போனாலோ போதுண்டி போதும், "எறாழுகிறபிள்ளை இளைத்துப்போனால் போகட்டும் பரியம்போடுகிற பெண்ணைப்பார்த்து வளர்" என்பதுபோல உழைக்கப்போன பிள்ளைக்கு ஒருகுடுவை தண்ணீரைக்காணோம், உனக்கென்னடி மேனிமினுக்கு என்று

நெட்டாகப் பேசுவாள். அந்த துக்கத்தைக் கேட்டதும் எடுத்த தண்ணீரை எடுத்தெறிந்துவிட்டு முகத்தைக் கழுவியாகிலும் பொட்டிட்டாலோ சரிதாண்டி பட்டணத்து தட்டுக்குப் பொட்டுத்தான் ஒன்று குறைவு என்பாள், தலையாவது வாரலாமென்று பார்த்தாலோ அடி கூந்தலழகி எழுந்து வேலையைப்பாரடி என்பாள். இந்த துக்கங்களைப் பொறுத்துக்கொண்டு துணியாகிலும் தோய்க்கப் போனாலோ அடியே சல்லாபாவாடைக் கட்டி உல்லாசம் செய்யப்போகிறாயோ என்பாள். கடைசியில் இதென்ன எதற்கும் இங்கிருந்தால் வம்பாயிருக்கிறதே என்று நினைத்து எதிர்வீட்டு வேதவல்லியிடம் போயாவது காலத்தைப் போக்கலாமென்று சென்றால் அங்கேயும் ஓடிவந்து இருக்கும்வேலை இருக்கட்டுமென்று இங்கெவன் உன்னை அழைத்தாண்டி என்பாள்.

இந்தக் கிழவிக்கு ஒருவரும் நியாயம் சொல்ல வருவதில்லை. யாராவது ஒன்று சொல்லிவிட்டாலோ போங்கடி சித்திராங்கிகளே எங்கள் காலத்தில் இப்படியெல்லாம் நடந்தோமா? நான் வாழும்போது ஓரகத்தியென்ன நாத்திமாரென்ன மாமி மாமனாரென்ன மூத்தாரென்ன மச்சினமாரென்ன இவ்வளவு ஜனக்கட்டில் நான் வாழ்ந்தேன், நான் ஐந்துபிள்ளை பெறுகிறவரையில் ஆம்படையானண்டை பேசியறிவேனா? தலைச்சன் பிள்ளையோடு கொண்டையைத் தள்ளிவிட்டேன், இரண்டாவது பிள்ளைக்கு இரவிக்கையைத் தள்ளினேன், மூன்றாவது பிள்ளைக்கு மோதிரத்தைத் தள்ளினேன், இப்படியெல்லாம் நடந்துகொண்டதால் ஒத்தாள் ஓரகத்தியோடு ஒற்று வாழ்ந்தோம், இக்காலத்துச் சிறுக்கிகள் ஐந்துபிள்ளை பெற்றாலும் அஞ்சாமல் வன்னக்கொண்டை போடுவதும், பாவாடைசல்லா சீரா

கக் கட்டுவதும், நெற்றிக்குப் பொட்டுப் பகட்டாகயிடுவதும், தினுசுக்கொரு ரவிக்கை இறுக்கிப் பிடித்துக் கட்டுவதும், ஆரிருந்தாலும் அச்சமில்லாமல் ஆம்படையானண்டை குலாவுவதும், பெரியோர் சிரியோரென்று மதிக்காமல் நடப்பதும், இந்தச் சிங்கிநாதங்களெல்லாம் எங்கள்காலத்திலறியோம், கொண்டவன் சரியாயிருந்தால் சிறுக்கிகள்பாடு திண்டாட்டமாய் முடியாதா? இந்த நடக்கைகளெல்லாம் குலப்பெண்களுக்கு அழகாமா? என்று பலவிதங்களாகப் பதங்கள்பாடிப் பாரதமாக முடிப்பாள். இந்தக்கிழவி ரோதனைக்காகவே நான் நாகரீகத்துக்குரிய காரியங்களையும் தவிர்த்து தலையொரு வேஷமும் துணியொரு வேஷமுமாக இருக்கிறேன்.

இந்த மாமியாரால் படுந்துக்கம் ஒருபக்க மிருந்தாலும் ஆம்படையானால் நான் படுந்துன்பம் சொல்லிமுடியுமோ? அடியம்மா! அதையும் கொஞ்சம்கேள், இக்கிழவியின் கொடுமையை அவரிடம் சொல்லப்போனால் அதற்கவர், டியாம் நான்சன்ஸ், அதையெல்லாம் என் காதிற் போடவேண்டாம் என்கிறார். இவருடைய தொந்தரவோ, அடி தடிப்பெண்ணே! காலையிலெழுந்ததும் முந்தி முகத்தைச் சுத்திசெய்து பொட்டிட்டு பின்பு மற்ற காரியங்களைச் செய்யக்கூடாதா? எப்போது பார்த்தாலும் முகம் பாடையாயிருக்கின்றதே, வீட்டு விவகாரந்தீர்ந்து ஒழிந்த வேளையில் நால்வர் தேவாரம் முதலாகிய அரியநூல்களைப் பார்க்கக்கூடாதா? என்ன வரவர சுத்த சோம்பேறியாய்ப் போய்விட்டாய், தேகத்தைச் சுத்திசெய்து துணியைத் தோய்த்துக் கட்டக்கூடாதா? இதற்குக் கூடவா ஒருவர் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பார். அச்சமயத்திலாவது குடும்பத்தின் துக்கத்தை வெளியிடப் போனால் என்ன 'டெவில்' கண்டபடி பினத்துகிறாய் என்பார்.

சென்னை மீனாள்.

# கிருஷ்ணம்மாள் துயரம்.

அடியக்கமாரே தங்கைமாரே!

நான் ஏன்தான் பெண்ணாய்ப் பிறந்தேனோ? அத்தை யென்று ஆசையாயிருந்தேனே, அவளென்னை சொத்தை பாக்கு வெற்றிலைக்கும் சுகமில்லாமற்செய்கிறாளே! பாட்டி பாட்டி யென்று மேட்டிமை கொண்டேனே, அந்தப் பாட்டி மாமியே இப்போது வாடி வதங்குகிறாளே! என் அப்பன்கூடப் பிறந்தவளே இப்படித் தப்பாய் என்னை நடத்தினால் நான் யாரிடம் முறையிட்டுக்கொள்வேன்? இதுவென்ன அவதி. ஆணாய்ப்பிறந்தால் அருமை, பெண்ணாய்ப் பிறந்தால் எருமையா? அவள் தன்மகனைப் பெற்றதுபோல் என்னை என்தாயார் பெறவில்லையா? என்னைப் பெற்றபெருமையென்ன? பேரிட்டநேர்த்தியென்ன? வளர்த்த வயணமென்ன? வாழ்வளித்த கீர்த்தியென்ன? நான் இருந்ததற்கும் வளர்ந்ததற்கும் இந்தப் பெரும்புலி கையிலே பிடித்துக் கொடுத்துவிட்டார்களே! நான் பாடுபட்டறியேன், பட்டினி யிருந்தறியேன், அடிமைவேலை செய்தறியேன், அவமானப்பட்டறியேன், எனக்குச் சங்கடத் தாலிகட்டி சஞ்சலத்தில் விட்டார்களே! "நிழல் நல்லதாயிருந்தாலும் * முசுடு பொல்லாததாயிருப்பதுபோல்" என் தர்மதுரை நல்லவராயிருந்தாலும் என்மாமி வன்கண்ணியாயிருக்கின்றாளே! என்புருஷனோடு நான் பேசினால் தலையணைமந்திர மென்கிறாள். அது என்னமாய்த்தானிருக்குமோ? அம்மம்மா! எப்போது பார்த்தாலும் என்மேல்

---

* முசுடு-என்பது மரத்தடியிலூர்ந்து வருபவர்களைக் கடித்து விடுவதால் சகிக்கக்கூடாத அவஸ்தையுண்டுபண்ணும் கட்டெறும்பைப்போன்ற ஓ ெ ந்நிற எறும்பு.

எறிந்து விழுகிறுளே! நானென்ன இவள் புருஷனைப் பிடுங்கிக்கொண்டது; பிள்ளையைத் தலைதிருகினது; மகளோடு மல்லுக்கொடுத்தது; என் புருஷன் சம்பாதனைக்கு நான் பாத்தியக்காரியாயிருக்க என்னை எந்தவிஷயத்திலும் புறக்கணித்துவிட்டு இவளே நடுவில் விழுகிறுளே! சட்டிப்பானை கழுவுவது என்வேலை, சம்பாதனையை வாங்குவது அவள் வேலையா? வீட்டைப் பெருக்குவது என்வேலை, பணத்தை வாங்குவது அவள் வேலையா? யான் படுகிற சிறுமை போதும் போதுமம்மா. என் மாமியாரிடத்தில் மட்டிப்பட்டமும் வாங்கினேன், தாசிப்பட்டமும் வாங்கினேன், வேசிப்பட்டமும் வாங்கினேன், தந்திரக்காரிப் பட்டமும் வாங்கினேன் இனி நான் வாழ்ந்த வாழ்வுபோதும் நொந்து தாய்வீட்டில் போயிருந்தாலும் இப்படிப்பட்ட கொடுஞ்சூரிமாமி ஒருவேளை திருட்டுப்பட்டங் கட்டினுலும் கட்டிவைப்பாள். இந்த உயிரை வைத்திருப்பதைவிட குளங்குட்டையில் வீழ்ந்து செத்தாலும் சாகலாம் போலிருக்கின்றது.

கிருஷ்ணம்மாள்.

## மதனசுந்தரி துயரம்.

என் அருமை இரத்தினமே கேள்!

எனக்கு வாய்த்திருக்கும் மாமி என்னைப்படாதுபாடு படுத்துவதுமன்னியில் அண்டை அயல்வீட்டுப் பெண்டுகளிடத்திலும் போய் அடியில் வருமாறு என்னைப்பற்றி முறையிடுகிறுள்.

அடியம்மா! நானவளை யறியாமற் கொண்டேனே! சம்பத்துக்காரன் மகள்களெல்லாமிருக்க இந்த சனியனை நானேபோய் தலைதொட்டுக் கொண்டேனே! ஒடுகாலி சக்களத்திவந்து என் சம்பத்தெல்லாம் ஒடுகிறதே! எட்டாம்பிறப்பு சக்களத்திவந்து எட்டிப்பார்த்ததும்என்வீடு குட்டிச்சுவராகிறதே! அறியாமலும் நான் அண்ணன்மகளென்று கொண்டேனே! வந்தவுடனே சிறுக்கிப் புந்தடித்தாள் வரவர சிறுக்கி மாடுமேய்க்கிறுள் என்ற கதையைப் போலானளே? ஏறெடுத்து நோக்காத என் மகனை என்னமோ மாயமந்திரம்பண்ணிவிட்டாளே! அம்மம்மா! தினராத்திரிக்கும் அவனுக்குத் தலையணைமந்திரம் பண்ணுகிறுளே! அவள் மந்திரமென்ன மந்திரமோ? மயக்கென்ன மயக்கோ? அவள் சொல்லென்ன சொக்குப்பொடியோ? அவள் வந்தபிறகு தாய் பிள்ளையென்கிற அன்பை யறுத்துவிட்டாளே. அம்மாவென்று அவன் வாய் நிரம்பக் கூப்பிடுகிறதை அடக்கிவிட்டாளே! அவன் உத்தியோகத்திற்குப்போய் உழைத்துவிட்டு உஸ் அஸ்ஸென்று ஓய்ந்து வரும் நேரத்தில் இவள்போய் இளித்துவிட்டவுடனே அவனுக்குக் குளிர்ந்துபோகிறதே! நான் வேணும் விளையுமென்று தேடி எனக்கே எதிரியானளே! இவளைப்போல்

நான் எக்காலத்திலும் புருஷனோடு எதிர்நின்று பேசியறியேன், பக்கத்தில்நின்று சிரித்தறியேன், ஏனென்று கேட்டறியேன், எடுத்துமுகம் பார்த்தறியேன், அடியம்மா? இக்காலத்துச் சிறிக்கிகளென்னமோ தங்களுடைய சைகையினாலும் பேச்சினாலும் பிரியத்தினாலும் புருஷனை இரண்டு நாளைக்குள் வசியப்படுத்திக்கொண்டு மாமியார் கண்பார்க்க மாமனார் எதிர்நிற்க நாத்திமார் காதுகேட்க புருஷனுக்கெதிரே மோர்ஜாபோட்டுக்கொண்டு சல்லீசாய் சாய்ந்துக்கொண்டு என்ன ஒரு கூச்சம் நாச்சம் கொஞ்சங்கூட இல்லாமல் கொஞ்சுகிறார்களம்மா. எது இஷ்டமிருந்தாலும் புருஷனைக் கேட்டுவிடுகிறாள் அதற்கு நானேன் இருக்கிறேன், மாமியாரைக் கேளாமல் மருமகள் தலைமுழுகலாமா, தலைசீவலாமா, மஞ்சள் குளிக்கலாமா, பொட்டிடலாமா, பூ முடிக்கலாமா, புதுத்துணி கட்டலாமா, பூஷணம் பூணலாமா, ஆசைப்பட்டது அரியப்பட்டது தின்னலாமா, அன்னியரோடு பேசலாமா? இவள் அண்ணனோடு இவளுக்கென்ன பேச்சு? தம்பியோடு இவளுக்கென்ன சம்பாஷணை? இது எங்கே அடுக்கும்? அடியம்மா! இது என்ன ஆச்சரியம்? அவளைக்கட்டி இரண்டு மூன்று வருடங்கூட ஆகவில்லை, இதற்குள்ளே நல்ல குதர்போலிருந்துக்கொண்டு இரண்டு ஆண்பிள்ளையை நோகாமல் பெற்றெடுத்துக்கொண்டாளே. இனி அவளுக்கென்ன? அதிகாரமெல்லாம் அவளுடையதல்லவா? என்மகளுக்கோ ஒரு ஆண்பிள்ளை கூட இல்லையே? ஆண்பிள்ளையைப் பெற்ற ஆணவம் ஜாஸ்தியாய்விட்டதே. இதையெல்லாம் பார்க்க என்வயிறு எரியாதா? குடல் குமுறாதா? என்பாவத்தைப் பார்த்தீர்களா அக்கமாரே? தங்கைமாரே? நான் ஆணைப்பெற்றும் பெரும்பாவியானேன். அவள் என்றைக்குத் தொலைவாளோ என்குடி மசழிக்குமோவென்று கையைக்காட்டி கருவி முறுமுறுக்கிறாள். மதனசுந்தரம்.

# குணபூஷணியின் துயரம்.

சகோதரிகளே வந்தனம்!

நான் ஒரு தனவான் வீட்டிலே பிறந்து தனவான் வீட்டிலே வாழ்க்கைப்பட்டேன். நான் பிறந்த இடம் புது வைமாநகர், புகுந்தயிடம் பொன்னகரி. என் தாயார் இறந்தபிற்பாடு என் தகப்பனார் இதற்குப் பதினாறு வருஷத்திற்கு முன் இராணுவ வகுப்பில் தளகர்த்தராயிருந்த என்னுடைய அத்தை மகனுக்கு என்னைப் பாணிக்கிரகணஞ் செய்துக்கொடுத்தார். எனக்குக் கலியாணமாகி நான் புருடன் வீட்டுக்குப் போனவுடனே தூர தேசத்தில் வாழ்க்கைப்பட்டிருந்த என்னுடைய நாத்தனார் புருஷன் பிராணவியோகம் ஆனதாகச் சமாச்சாரம் வந்தபடியால் என் மாமியார் அந்த ஊருக்குப் போய்விட்டாள் அவள் திரும்பிவரப் பத்துமாதம் சென்றது. அந்தப் பத்துமாதக் காலமும் நானும் என்னுடைய பர்த்தாவும் தேகமும் சீவனும்போலவும், கரும்புரசமும்போலவும், நகமுஞ் சதையும் போலவும், அதிகப் பிரீதியாக வாழ்ந்தோம். எங்களுடைய சந்தோஷம் நீடித்திருந்தால் இந்த உலகமே சதமென்று நாங்கள் எண்ணிவிடுவோம் என்றோ அல்லது வேறென்ன காரணமோ எங்களுடைய சந்தோஷத்தைக் கடவுள் மாற்றிவிட்டார். எப்படியென்றால் பத்து மாதத்திற்குப் பிறகு என்னுடைய மாமியும் அமங்கலியாய்ப்போன அவளுடைய மகளும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் எங்களுடைய கிரகத்தில் வந்து பிரவேசித்து கிரகசாரமே வந்து நுழைந்தபோது நானும் என் பர்த்தாவும் அதிக நேசமாகச் சல்லாபித்துக் கொண்டிருந்தோம். அதைக்கண்டவுட

னே அவர்களுக்குக் கோபம் பொங்கி அவர்கள் எங்களைப் பார்த்து கடூரமான பார்வை ஆயிரம் கத்திவெட்டுக்குச் சமானமிருந்தது. அந்தப்பார்வையில் நாங்கள் பட்டுப் போகாமல் பிழைத்தது யார்செய்த புண்ணியமோ தெரிய வில்லை. நான் அவர்களைக் கண்டவுடனே அவர்களுக்கு நமஸ்காரஞ்செய்து அப்பாலே போய்விட்டேன். என்மாமி யார் பர்த்தாவைநோக்கி நானுன் தகப்பனுரை விவாசஞ் செய்து இருபதுவருஷம் வரைக்கும் மங்கிலிய ஸ்திரீயா யிருந்தேன், அந்த இருபதுவருஷ காலத்திலும் இரண்டு வார்த்தைகூட என்னுடைய நாயகரிடத்தில் நான் பேசி யறியேன். புருஷர் வீட்டில் வந்து அடிவைத்தவுடனே நாத்தனர் புருஷனைத் தின்று விட்டவளிடத்தில் உனக் கென்ன பேச்சு என்றாள். உடனே என் பர்த்தா நாத்த னர் புருஷன் இறந்துபோனுல் என் பெண்சாதி என்ன செய்வாள்? நான் என் பெண்சாதி யிடத்தில் பேசினேனே தவிர மற்ற அந்நிய ஸ்திரீயிடத்தில் பேசவில்லையே என் றார். இதைக் கேட்டவுடனே "அந்தச் சிறுக்கி உனக்கு இவ்வளவு பேசக் கற்றுக்கொடுத்து விட்டாளா?" என்று என்மாமி குதித்த குதிப்பும் ஆடின ஆட்டமும் சதிருக்கு விட்ட தேவடியாள் கூட ஆடமாட்டார்கள். என்னுடைய நாயகர் ஆதலால் ஊர்சிரிக்குமென்று பயந்து ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டார். அன்றுமுதல் பலநாள்வரைக் கும் என்மாமியார் வாயும் நாத்தனர் வாயும் ஓயவேயில்லை. அவர்க ளென்னுடைய கொட்டத்தை அடக்கவேணு மென்று தீர்மானித்துக்கொண்டு வேலைக்காரர்களை யெல் லாம் தள்ளிவிட்டு சகல வேலைகளையும் நான் செய்யும்படி என் தலையிலே சுமத்தினர்கள். என் பர்த்தாவுக்கு அமுது படைத்தல் தாம்பூலங் கொடுத்தல் முதலிய வேலைகளையும்

நான் செய்கிறதாயிருந்தால் என்னுடைய சிரமங்களுக்கு ஒரு பரிகாரமாயிருக்கும். அந்த வேலைகளையெல்லாம் அவர்கள் வகித்துக்கொண்டு கஷ்டமான வேலைகளையெல்லாம் என்பங்கில் வைத்துவிட்டார்கள். எல்லாருஞ் சாப்பிட்ட பிறகு அவர்களுடைய * உச்சிட்டத்துக்காக நான் காத்திருக்கவேண்டுமேயல்லாது எனக்குப் பசித்தபோது நான் சாப்பிடக்கூடாது. அந்த உச்சிட்டமும் பாதிவயிற்றுக்குக் கூட காண்கிறதில்லை என்மாமியும் நாத்தியும் வந்தநாள் முதல் நானும் என்புருஷனும் பேசுவது குதிரைக்கொம்பாகிவிட்டது. நான் ஒருபக்கத்திலும் அவர் ஒருபக்கத்திலும் இருப்பதால் நாங்கள் ஒருவரையொருவர் பார்க்கக் கூடாமலும் நயனபாஷைகளுக்குக் கூட இடமில்லாமலும் போய்விட்டது. இராக்காலங்களில் என்னுடைய பர்த்தாவின் படுக்கையறைக்குள் நான் பிரவேசிக்காதபடி அந்த அறையின் வாசற்படி ஓரத்தில் தாயும் மகளும் படுத்துக்கொண்டு ஒருவர்மாற்றி ஒருவர் பாராகொடுக்கத் தலைப்பட்டார்கள்.

இவ்வளவு துன்மார்க்கங்களுக்கும் இடங்கொடுத்துக்கொண்டு என்கணவர் அபேக்ஷயாயிருப்பது எனக்கு மனவேதனையாயிருந்தாலும் அவர் மானத்துக்குப் பயந்து மௌனமாயிருக்கிறாரென்றும் அவருக்கு என்னிடத்திலிருக்கிற அன்பு குறையாதென்றுமெண்ணி நான் சகல கஷ்டநஷ்ட நிஷ்டூரங்களையும் பொறுமையுடன் சகித்தேன். அப்படியிருக்க என் மாமியும் நாத்தியும் சில வியபசாரிகளை அடிக்கடி வீட்டுக்கு வரவழைத்து அவர்களுக்கும் என் பர்த்தாவுக்கும் சிநேகத்தை உண்டுபண்ண சர்வ பிரயத்தனஞ் செய்தார்கள். என்னுடைய கணவர் சொந்த

* உச்சிட்டமென்பது சாப்பிட்டபாகத்தில் மீந்திருப்பவை.

ஸ்திரீகளிடத்தில் பேசக்கூடாதென்று விலக்கி அன்னிய ஸ்திரீகளுடன் சகவாசஞ் செய்யும்படி முயற்சிசெய்த என்னுடைய மாமியும் நாத்தியும் எப்படிப்பட்ட பொல்லாதவர்களா யிருக்கவேண்டுமென்று நீங்களே உணர்ந்துகொள்ளுங்கள். இந்தக் கொடுமைகளை யெல்லாம் தூரதேசத்திலிருக்கிற என் தகப்பனுருக்கு நான் கடிதமூலமாகத் தெரிவித்தால் உடனே எனக்குப் பரிகாரம் கிடைத்திருக்குமென்பதில் சந்தேகமில்லை. என் பாட்டனுர் இறந்தபிறகு என் தகப்பனுரே அவருடைய தங்கையாகிய என்மாமியை வளர்த்து விவாகஞ் செய்து கொடுத்ததுந்தவிர அவள் விதந்துவானபிறகு அவரே அவளையும் அவள் பிள்ளையாகிய என் பர்த்தாவையும் நெடுங்காலம் ஆதரித்துவந்தபடியாலும், அவர் துஷ்டதண்டகர் ஆனபடியாலும், அவரைக் கண்டால் கருடனைக்கண்ட பாம்புபோல் என்னுடைய மாமியும் நாத்தியும் அடங்குவார்களென்பது நிச்சயமே. ஆயினும் புருஷன்வீட்டில் நடக்கிற கொடுமைகளை தகப்பனுக்குந் தெரிவிப்பது பதிவிரதைகளுக்குத் தகுதியல்லவென்றும், சிலகத்துக்கு ஆஸ்பதம் ஆகுமென்றும் நினைந்து நான் என் தகப்பனுருக்கும் கடிதமெழுதாம லிருந்துவிட்டேனே. என்னுடைய வருத்தங்களையெல்லாம் என் புருஷனுக்கு எவ்வகையிலாவது தெரிவிக்கிறதென்று நிச்சயித்துக்கொண்டு ஒருநாள் நடுச்சாமத்தில் எல்லாரும் தூங்கினபிற்பாடு நான் எழுந்து சப்தஞ்செய்யாமல் என் பர்த்தாவின் படுக்கையறைக்கு நேரே போனேன். அந்த அறையின் வாசற்படி ஓரத்தில் இரண்டு காவற்காரிகளும் படுத்திருந்தார்கள். அவர்களுடைய காவலைக்கடந்து உள்ளேபோகிறதற்காக அவர்களிருவரையும் ஒரேதாண்டாய்த் தாண்டினேன். உடனே என்சேலை தடுக்கி அடியற்ற மரம்போல்

அவர்கள்மேலே விழுந்துவிட்டேன். அப்போது இருட்டா யிருந்ததால் அவர்கள் என்னைக்கையாலே தடவிப்பார்த்து நான்தானென்று கண்டுபிடித்துக்கொண்டு என்னை அடிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் என்னைப் பிடித்தபிடியைவிடா மல் அடித்தபடியால் நான் அடி பொருக்கமாட்டாமல் நகத்தால் அவர்களைக் கீறினேன். அவர்கள் தங்களுடைய நகங்களால் தங்களைத் தாங்களே அதிகமாகக் கீறிவிட்டுக் கொண்டு கூ! கூ! எங்களைவந்து கொல்லுகிறாள் என்று கூவினார்கள். உடனே என்கணவர் விழித்துக்கொண்டு தீபத் துடன் எங்களிடம் ஓடிவந்தார். என்னைப் பார்த்தவுடனே உன்னுடைய அறையைவிட்டு இங்கே நீ ஏன்வந்தாய் என்று கேட்டார். உண்மையான காரணத்தைச் சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு கள்ளப்புருஷன் வீட்டுக்குப் போய் அகப்பட்டுக்கொண்டவள்போல்விழித்தேன். அந்த நேரத்தில் இருவரும் அவர்களுடைய காயங்களை என்புரு ஷனுக்குக் காட்டி எனக்குப் பேயாவது பயித்தியமாவது பிடித்திருக்க வேண்டுமென்றும் சாதித்தார்கள். என்கண வரும் அப்படியே அபிப்பிராயப்பட்டு என்னைத் தள்ளிக் கொண்டுபோய் என்னுடைய அறைக்குள்ளாக விட்டுக் கதவை இழுத்துச் சாற்றி வெளிப்பக்கத்தில் நாதாங்கி போட்டுவிட்டார். நான் புருஷனைப் பார்க்கப்போய் இப் படிவந்து சம்பவித்ததேயென்று நினைத்து அந்த இரா முழுதும் நான் அழுதகண்ணீர் அறைமுழுதும் நிறைந்து விட்டது. மறுநாள் விடிந்தவுடனே வைத்தியர்களும் மந் திரவாதிகளும் வந்து கூடிவிட்டார்கள். வைத்தியர்கள் எல் லாரும் எனக்குப் பயித்தியமென்று சாதித்தார்கள். மந்திர வாதிகள் எல்லாரும் எனக்குப் பேய் பிடித்திருக்கிற தென்றுவாதித்தார்கள். அவர்களில் ஒருவன் என்னை நூற்

றெட்டுப் பேய் பிடித்திருக்கிறதென்று சொன்னான். அதைக் கேட்டவுடனே என்னையறியாமலே எனக்குக் கோபம் ஜெனித்து அவ்விடத்திற் கிடந்த ஒரு கல்லையெடுத்து அவன்மேலெறிந்தேன். என்னை பேய் பிடித்திருக்கிறதென்பதற்கு இது பிரத்தியட்சமான ருசு ஆகிவிட்டது. உடனே என்னைப் பிடித்துக் கைவிலங்கு கால்விலங்கு போட்டுவிட்டு என்தலையை விரித்து வைத்தியர் ஒருபக்கத்திலும் மந்திரவாதி ஒருபக்கத்திலும் எனக்குச்செய்த சித்திராங்கினைகளை விவரிக்க என்னுடைய ஒருவாய் போதாது. நான் அவர்களைப்பார்த்து 'ஒரு உயிருக்கு இத்தனை இயமன்கள் வேண்டுமா? எனக்குப் பயித்தியமுமில்லை என்னை வீணாக ஏன் வாதிக்கிறீர்' என்று அவர்களுக்கு இரக்கமுண்டாகும்படி நான்கற்ற வித்தைகளை யெல்லாங் காட்டினேன். நான் சொல்வதெல்லா மெனக்குப் பிரதிகூலமாய் முடிந்ததே தவிர யாதொரு அனுகூலத்தையுஞ் செய்யவில்லை.

நான் புருஷனோடு கூடியிருந்தகாலத்தில் எனக்குக் கர்ப்பம் உண்டாகி அப்போது எனக்குத் தெரியாமலிருந்து இப்போது சில கர்ப்பச்சின்னங்கள் தோன்றினபடியால் கருப்பிணியாயிருக்கிற எனக்கு மருந்துகள் கொடுப்பது சரியல்லவென்று வைத்தியருக்குத் தெரிவித்தேன். நான் கருப்பணியென்று தெரிந்தமாத்திரத்தில் என்னுடைய மாமியும், நாத்தியும் அவர்களுடைய புருஷர்கள் அன்றைக்குத்தான் இறந்ததுபோற் கரைகாணாத துக்க சாகரத்தில் அமிழ்ந்து முன்னைப்பார்க்கிலும் நூறுமடங்கு அதிகமாக என்னைப் பகைக்க ஆரம்பித்தார்கள். என்னுடைய கர்ப்பம் அழியத்தக்க ஔஷதப் பிரயோகம்செய்ய அவர்கள் யத்தனமாயிருக்கையில் இராக்ஷதனுக்கும் ஒரு

புரோகிதன் உண்டு என்பதுபோலே என்னுடைய மாமி யாரை யடக்கத்தக்க சாமியார் ஒருவர் வந்துசேர்ந்தார். அவர் யாரென்றால் என்னுடைய தகப்பனார்தான். அவர் என்னுடைய அலங்கோலத்தைப் பார்த்தவுடனே உள்ளங் கலங்கி என்னைக் கட்டிக்கொண்டு கதறினார். பிற்பாடு எனக்குப் பயித்தியமா அல்லவாவென்று நிச்சயிக்கும்பொ ருட்டு என்னைப்பார்த்து பலகேள்விகள் கேட்டார். அவ ருக்கு நான் தகுதியான மறுமொழி சொன்னதுந் தவிர நடந்த காரியங்களையெல்லாம் சுருக்கமாக அவருக்கு தெரி வித்தேன். என்மாமி நாத்திகளின்மேல் அதிகமாக ஒன் றுஞ் சொல்லாமல் கர்மகோளாளர்கள் செய்த இரண் டொரு காரியங்களை வெளிப்படுத்தினேன். எனக்கு பைத் தியமுமில்லை பேயுமில்லையென்று என் தகப்பனார் கண்டு பிடித்துக்கொண்டு என்கை விலங்குகளை வெட்டிவிட ஆரம் பித்தார். உடனே என் மாமியார் ஓடிவந்து அண்ணா? நீங் கள் செய்வதை யோசித்துச் செய்யுங்கள், விலங்கை நிவர் த்திசெய்தால் அவள் யாரையாவது உபத்திரவஞ் செய் வாளேயென்றாள். இதைக் கேட்டவுடனே என் தகப்பனார் கோபாதிகாரராய் என் மாமியாரை எட்டி வுதைத்தார். அவள் எட்டுக் குட்டிகரணம் போட்டுக்கொண்டு கீழே விழுந்தாள். நான் உடனே என் தகப்பனாருடைய காலைப் பிடித்துக்கொண்டு எய்தவனை நோகாமல் அம்பைநோவது போல வெல்லாங் கடவுள் செயலாயிருக்க என் மாமியா ரைக் கோபித்துப் பிரயோசனமென்ன? நான் ஏதோ துஷ் கிருத்தியஞ் செய்ததற்காகக் கடவுள் என்னைத் தண்டித் தார். என்னுடைய அத்தையை மொத்தவேண்டாமென்று பிரார்த்தித்தேன். அவர் உடனே என்னைநோக்கி, அவள் பெண் கேட்டபோது அவளுடைய துர்க்குணங்களைப் பற்

றியே பெண்கொடுக்க நிராகரித்தேன். அவள் மறுபடியும் ஆயிரந்தரம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதினாலும் சகோதர பக்ஷத்தினாலும் கிளியைவளர்த்து பூனைகையிலே கொடுத்ததுபோல விவாகம் செய்துக்கொடுத்தேன். அதற்குவந்த லாபம் இதுதான் என்றார். அந்தச் சமயத்தில் என் கணவர் வந்து என் தகப்பனாருக்கு நமஸ்காரஞ் செய்தார். அவரை என் தகப்பனார் பார்த்து நீ சௌரிவானென்று பெயர் வைத்துக்கொண்டு உன் வீட்டுப் பெண்களை அடக்கத் திறமையில்லாம லென்னை வரும்படி பலகடிதங்கள் அனுப்பினாய். இரண்டு துர்ப்பலமுள்ள ஸ்திரீகளை அடக்கச் சக்தியில்லாத நீ யுத்தரங்கத்தில் உன்னுடைய சத்துருக்களை எப்படி ஜெயிப்பாயென்று பரிகாசஞ் செய்தார். என் புருஷன் என் தகப்பனாருக்குக் கடிதமெழுதி வரவழைத்ததாக என் தகப்பனாருடைய வார்த்தைகளால் வெளியிட்டபடியால் என் புருஷன்மீது எனக்குண்டாயிருந்த மனஸ்தாபங்களெல்லாம் ஒரு நிமிஷத்தில் பறந்துவிட்டன. என் தகப்பனாரும் பர்த்தாவும் என் விலங்குகளைத் தறித்து என் மாமியார் எனக்கு நியமித்திருந்த காராகிரகத்தினின்று என்னை விடுதலை செய்தார்கள். உடனேபைத்தியமும் தொலைந்து பேயும் பறந்து நான் பழையபடி அடிக்கடி பர்த்தாவை சந்திக்கவும் அவருடன் சம்பாஷிக்கவும் ஆரம்பித்தேன். இராக்காலங்களில் என் பர்த்தாவினுடைய பள்ளி அறைக்கு என்மாமியும் நாத்தியும் செய்துவந்த காவலும் ஒழிந்தது. அவர்களிருவரும் என் பிதா வந்தது முதல், பெட்டிப்பாம்புபோல் அடங்கினார்கள். என்னுடைய கர்ப்பம் நாள்தோறும் முதிர்ந்து பத்தாமாதத்தில் பாலசூரியனைப்போல ஒரு பாலனைப்பெற்று மகிழ்ந்தேன்.

குணபூஷணி.

# பொது.

இக்கதைகளை வாசித்தவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் நமது தேசத்தார் ஸ்திரீகளை மிகவும் அவமதிக்கிறார்களென்று விளங்குகிறதல்லவா; ஓர் குடும்பத்தில் விவாகமான பெண் தன் மாமி வீட்டில் பாராட்டி நடப்பதையறிந்து நாத்திமார், மாற்றாந்தாய், ஓரகத்தி முதலானவர்களுடைய பொறாமையால் பீடிக்கப்படுகின்றனள். இதைப் பார்த்துவரும் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களும் சுற்றத்தார்களும் அந்தஸ்திரீயை அவமதிக்க இடமுண்டாகின்றது. அதனால் ஸ்திரீயின்பெருமை குறைந்துபோகின்றது. இதுதவிர ஸ்திரீகளை மாமிவீட்டார் குரூரமாக நடத்துவதினால் அவர்கள் மன ஊக்கமழிந்து பேய்போலவும் பயித்தியமும் பிடித்தவர்களைப்போலவும் மருளுகையில், காட்டேரி, சங்கிலிமுனி, கருப்பண்ணன் முதலிய துஷ்டதேவதைகளி லொன்றேயல்லவோ பிடித்திருக்கின்றன வென பெயர்வைத்து வயிறுவளர்க்கும் பூசாரியாகிய வேஷாண்டி பாஷாண்டி யென்பவர்களாகிய கொடும் பாதகர் கையில் ஒப்புவித்து விடுகிறார்கள். அக்கொடும் பாவிகள் திருநீறென்ற சாம்பலுடன் பூனைக்காஞ்சல் மூலிகையைச் சேர்த்து ஸ்திரீகளின்பேரில் தூவிவிட்டும், சாம்பிராணிப் புகையில் பேய்மிரட்டி வேரைக்கலந்துக் காட்டியும், உடுக்கைகளைத் தட்டிக்கொண்டு தோல்வாராலும் பிரம்பாலும் தடியாலும் குரூரமாய் அடித்து அவமரியாதையாய்த் தாறுமாறாக பேசி ஏசுகின்றார்கள். ஐயோ? அப்பெண்கள் என்ன செய்வார்கள், தங்கள் மாமி வீட்டில் அடையும் கஷ்டங்கள் போதாமல் இக்கொடிய சண்டாளப் பூசாரிகளிடத்திலும் நேர்ந்த இம்சைக்குப்பயந்து அவர்கள் சொற்

படி ஆடி தங்கள் கஷ்டத்தைச் சகித்துக்கொள்ளுகிறார்கள். இது என்ன பரிதாபம் நம்மவர்கள் சற்றாகிலும் ஸ்திரீகளின்பேரில் மனமிரங்கி சாந்தமா யிருக்கலாகாதா? உலகில் மனிதரைப் பிடிக்கும் பேய் பிசாசுகளுண்டா? இதன் பேரில் நமது தேசத்தார் ஏன் நம்பிக்கை வீணாகவைத்து மோசம்போகவேண்டும்? ஸ்திரீகள் மிகவும் சாந்தமும் மன இரக்கமு முள்ளவர்களாகையால் அவர்களுக்கு நேரிடும் சங்கடத்தினால் மனக்குழப்பமுண்டாகி தவிக்கின்றார்களேயன்றி வேறே பேய் இருந்து அவர்களைப் பிடித்தாட்டுகிறதென்று சொல்வது தப்பு. ஆகையால் அறிவாளர் இதையறிந்து ஸ்திரீகளை அவர்களுடைய நிர்ப்பாக்கிய ஸ்திதியிலிருந்து நீக்க முயலவேண்டும்.

**மருமக்கள் துயரம்**

**முற்றிற்று.**

**ஸ்ரீ ராம பராக்கிரமம்** ஸ்ரீராம சரித்திரத்தைப் ப
ணஞ் செய்பவர்களுக்கு நாடியபொருள் கைகூடுமென்றும்,
மும் புகழு முண்டாகுமென்றும், பேய் பில்லி நோய் சூனியம்
லான பிணிகளைவரவொட்டாமல்தடுக்குமென்றும்க ,ச்சக்ரவ
கம்பநாட்டாள்வார் திருவாய்மலர்ந்தருளி யிருப்பதால் பால
பாலிகைகள் முதல் சகலரும் அதிசுலபமாகவாசித்து நற்பய
யும்பொருட்டு ஸ்ரீராமருடைய வைபவங்களை மிகத்தெளிவாய்
க்கி, கம்பராமாயணக்கவிகளினின்றும், பாகவதபுராணத்தி
றும், நாலாயிரப் பிரபந்தத்தினின்றும் மேற்கோளாகப் பலசெ
களுடன் மிகவும் தெளிவான செந்தமிழ் நடையில் கதா பு
காஞ்சீபுரம் தி. அரங்கசாமி நாயிடு அவர்களால் எழுதப்பட்டி
றது. இதன் விலை 0

**டைலரிங் அண்டு கட்டிங்புக்.** அதாவது தையல்
செய்யும் நண்பர்களுக்கு ஓர் அருமையானபுத்தகம் இதில் கே
முதலியான வெட்டுவதற்கான கணக்குகளையும், ப்ளான்க
பிரித்துத்தெளிவாகக்காட்டி யிருப்பதால் வேறொருவர் துணை
றியாவரும் தாமாகவே துணிகளை வெட்டவும், அளவுகளைப்பூர்
மார்க்கு செய்து தேவையான ப்ளான்படி தைக்கவும் கூடு
விலை அ

**நவரத்தின ஒப்பாரி** இல்லறமாதர்கள் இறந்தவர்களுக்
துக்கிகரும் ஒப்பாரிகளும், காமனுக்கும் ரதிக்கும் வாக்குவாத
இரதிதேவியின் புலம்பலொப்பாரியும், இலாவணிகளும், கீ
தத்தோடிங்கூடிய வர்ணமெட்டுகளை ஆங்காங்கு விவரித்துக்க
தமிழ்பாக்களைப்பூட்டி மிகத்தெளிவாக அச்சிடப்பட்ட நூர் சி
நூல். விலை அ

**ஸ்ரீ கேதாரேஸ்வர விரத மகிமை.** நம்தமிழ்நாட்டில்
இயமாய் தொன்றுதொட்டு ஸ்திரீகளால் அனுட்டித்துவரும் வே
புகளில் கேதாரிவிரத மென்பது தலைமைவாய்ந்ததென் பதை
லருமறிவார்களாயினும் நம்சகோதரிகளிற்சிலரேயதன் மகத்து
தையறிந்திருக்கிறார்கள். அவ்விரதத்தின் மகிமை இன்னதென
ரிந்துக்கொண்டு அதையனுட்டிக்கும்முறைபடி நடத்திவரின்
ஐஸ்வரியங்களையும்பெற்று இம்மை மறுமைப்பயன்களை யனட
சுளென ஸ்ரீ நாரதமகாமுனிவர் விளம்பியிருக்கும் வாக்கியத்தி
இப்புத்தகத்தில் அவ்விரதத்தின்மகிமை சகலருக்கும் விசிதம
படிதெள்ளியபாட்டுஉரையுடன்எழுதிவெளியாக்கப்பட்டிருக்கி
விலை அ